விட்டேன். வந்தால் இங்கே அண்ணா அவர்கள் என்னை, 'நீ குளித்தலையில் நிற்கிறாய்' என்று அறிவித்து விட்டார்கள். அதை மீற முடியவில்லை. எனவே குளித்தலையில் நின்றேன். அந்த அளவுக்கு நம்முடைய இராஜேந்திரன் அவர்களுடைய தகப்பனாருக்கும் எனக்கும் நட்பு இருந்தது என்றால் கட்சிகளுக்கு அப்பாற்பட்ட ஒரு நட்பு உணர்வு இருந்தது. கால கட்டத்திலே நீடிக்கப்பட்ட உணர்வுகள் எவ்வளவுதான் கட்சி வேறுபாடுகள் இருந்தாலும் கூட அதையும் கடந்து அந்தப் பண்பான நட்புகளும் அரசியல் உணர்வுகளும் அதற்கு அப்பாற்பட்ட ஒரு பண்பான முறையிலே ஏற்பட்டபோது பழக்க வழக்கங்கள் மாறி அதிலும் குறிப்பாக வேதாரண்யம் பகுதியிலே அறவே மாறி, ஒரு விரோத காழ்ப்பு உணர்ச்சி அளவிலே வந்திருக்கிறது.

இந்தச் சம்பவங்கள் அங்கே நடைபெற்றதற்குக் காரணம் அங்கே ஒரு எஸ். பி. இல்லை என்று குறிப்பிட்டார்கள். எஸ். பி. அல்ல, டி.ஜி.பி.யே அங்கே இருந்தாலும்கூட அங்கே ஏற்பட்டிருக்கிற காழ்ப்பு உணர்வை மனங்கள் மாறினால் அல்லாமல் அதை யாராலும் மாற்ற முடியாது. எனவே அரசியல் காரணங்களுக்காக இப்படிப்பட்ட கொலைகள் நடைபெறுவதை, வன்முறைகள் நடைபெறுவதை நிச்சயமாக இந்த அரசு விரும்பாது. அதிலே யார் ஈடுபட்டாலும் தயவு தாட்சண்யம் இல்லாமல் நடவடிக்கை எடுக்கிறோம் என்பதற்கு அவர் இங்கே காட்டிய அந்த தி.மு.க. நோட்டீஸ் ஒன்றே போதுமான சான்றாகும். போலீசார் எடுத்த நடவடிக்கையைக் கண்டித்து, தி.மு.க அங்கே நோட்டீஸ் விடுகிறது என்றால் அதை இந்த அரசு ஏற்றுக்கொள்ளவில்லை, போலீசார் நடவடிக்கையைத்தான் ஏற்றுக் கொள்கிறது என்பதை எடுத்துக் கூறி, இந்த விளக்கங்களுக்குப் பிறகும் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை, என்று தலைவரவர்களே, தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

4. உரிமைப் பிரச்சினை.

சென்னை வானொலி நிலையத்தின் மீது— பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு உறுப்பினர் திருமதி பாப்பா உமாநாத் அவர்கள், '' தமிழக மக்கள் நலன்கள் சம்பந்தப்பட்ட 1989–90 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் பட்ஜெட் மீது 29–3–1989 ஆம் தேதி அன்று சட்டமன்றத்தில் நடந்த பொது விவாதச் செய்தி அன்றைய தினம் மாலை 6-30 மணிக்கான மாநிலச் செய்தியில் வேண்டுமென்றே

உள்நோக்கத்துடன் முற்றிலும் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளது. அந்தச் செய்திதனைக் கேட்ட மக்கள் மத்தியில் 29-3-1989 தேதியன்று சட்டமன்றத்தில் பட்ஜெட் பற்றி எதுவும் விவாதிக்கவில்லை என்ற தவறான எண்ணம் ஏற்படும் வகையில் அமைந்துள்ளது. இது சட்டமன்றத்தை அவமதிப்பதாகும்'' என்று குறிப்பிட்டு அனைத்திந்திய வானொலி நிலையத்தார் மீது அவை உரிமை மீறல் பிரச்சனை அறிவிப்பைக் கொடுத்துள்ளார். இது குறித்து வானொலி நிலைய இயக்குநரிடம் விளக்கம் கேட்கப்பட்டது. அதற்கு வானொலி நிலைய இயக்குநர் கீழ்க் கண்ட விளக்கங்களை அளித்துள்ளார்.

''29-3-1989 ஆம் நாளன்று சட்டப் பேரவைத் தொடர்பான பல்வேறு செய்திகளும், இதரச் செய்திகளும் செய்தி அறிக்கையில், 10 நிமிட கால வரம்புக்கு அதிகமாக இருந்ததால் நிதிநிலை அறிக்கை மீதான விவாதம் மறுநாள் காலைச் செய்தியில் சேர்த்துக்கொள்ளப் பட்டது. 10 நிமிடம் என்பது குறுகியகாலம் என்ப தாலும், இதரச் செய்திகளையும் கொடுக்க வேண்டி இருப்பதாலும் பொதுவாகப் பேரவைச் செய்தியின் ஒரு பகு தியை மறுநாள் காலைச் செய்தி அறிக்கையில் கொடுப்பது மரபாக இருந்து வருகிறது. 29-3-1989 ஆம் நாள் மாலைச் செய்தியில் சுமார் 7 நிமிடம் அதாவது முக்கால் பகுதி சட்டப் பேரவை செய்தியே இடம் பெற்றது. 30-3-1989 அன்று காலை 6-45 மணிச் செய்தியில் நிதிநிலை அறிக்கை மீது அதற்கு முந்தைய நாள் நடைபெற்ற விவாதம் விவரமாகக் கொடுக்கப்பட்டது. இதில் திருமதி பாப்பா உமாநாத் அவர்களின் விவாத விவரமும் இடம் பெற்றது. இத்துடன் 29-3-1989 ஆம் நாள் மாலை 7 மணியிலிருந்து 10 நிமிடம் ஒலி பரப்பாகும் சட்டப்பேரவை நடவடிக்கை பற்றிய விமர்சனத்தில் பேரவையின் இதர நடவடிக் கைகள் பற்றிய செய்திகளோடு நிதிநிலை அறிக்கை விவாதமும் தொடர்ந்து இடம் பெற்றது. இதிலும் திருமதி பாப்பா உமா நாத் தெரிவித்த கருத்தும் இடம் பெற்றது. தொடர்ந்து சட்டப் பேரவை நடவடிக்கைகள் வானொலி நிலையச் செய்தி அறிக்கைகளில் ஆக்கப்பூர்வமான கோணத்தில் ஒலிபரப்பாகும் என்பதை மிகவும் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.'' என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

எனவே சென்னை வானொலி நிலைய இயக்குநரின் இந்த விளக்கத்திற்குப் பிறகு இதில் மேலும் எந்த நடவடிக்கையும் தேவை யில்லை என்று கருதி இந்தப் பிரச்சினையை இத்துடன் முடித்து விடலாம் என்று பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்

தகவல் கோரல்—தொடர்ச்சி.

(உ) காவலிலுள்ள உறுப்பினர் திரு. எஸ். டி. உகம்சந்த் உண்ணா விரதம் முடித்தது குறித்த தகவல்.

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் சிறைச்சாலையில் இருக்கிற நண்பர் திரு. உகம்சந்த் அவர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டு இருக்கி